**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆனித்திங்கள் 08 ம் நாள்

**இ.ம.எண். 1/2026**

**in**

**அ.வ.எண். 4/2026**

சிவப்பிரகாசம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. குமரவேல் (இறந்துவிட்டார்)
2. கண்ணப்பன் (இறந்துவிட்டார்)
3. சரஸ்வதி
4. முத்துலட்சுமி
5. கதிர்வேல்
6. விஜய்
7. பார்வதி
8. கார்த்திக் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 11.06.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அங்குராஜ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.கருணாகரமூர்த்தி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு

வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.,

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் அ.வ.எண்.92/2011 வழக்கின் வழக்குரையில் இம்மனுவில் கண்டுள்ளபடிக்கு திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:—**

i) அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது 03.01.2014 ம் தேதியன்று 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி இறந்துவிட்டார். மேற்படியாரின் வாரிசுகள் 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆவார்கள். 29.01.2013 ம் தேதியன்று 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி இறந்துவிட்டார். மேற்படியாரின் வாரிசுகள் 3, 4, 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆவார்கள். மேற்படி வழக்கில் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.5/2023 மனுவில் மேற்படி 7, 8 மற்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளாக ஏற்கனவே கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேற்படி இ.ம.எண்.5/2023 மனுவானது 20.12.2023 ம் தேதி இந்நீதிமன்றத்தால் அனுமதியளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அ.வ.எண்.92/2011 ன் வழக்குரையிலும் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே அ.வ.எண்.92/2011

வழக்கின் வழக்குரையில் இம்மனுவில் கண்டுள்ளபடிக்கு திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

2. மனுதாரர் மற்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனு, இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்காவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. 7, 8 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**<u>4. தீர்வு:–</u>**

மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு நிலுவையில் இருந்தபோது 03.01.2014 ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும் மேற்படியாரின் வாரிசுகள் 7, 8 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் என்றும் 29.01.2013 ம் தேதியன்று 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றும் மேற்படியாரின் வாரிசுகள் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் என்றும் இ.ம.எண்.5/2023 மனுவில் மேற்படி 7, 8 மற்றும் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளாக ஏற்கனவே கட்சி சேர்க்கப்பட்டு மேற்படி மனுவானது 20.12.2023 ம் தேதி இந்நீதிமன்றத்தால் அனுமதியளித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் எனவே அ.வ.எண்.92/2011 வழக்கின்

வழக்குரையில் இம்மனுவில் கண்டுள்ளபடிக்கு திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

5. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அ.வ.எண்.92/2011 என்ற வழக்கானது தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இம்மனுவின் மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 11.07.2011 அன்று 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 17.04.2014 அன்று வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 24.04.2024 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 01.12.2024 அன்று வா.சா.1 பிரதிவாதி தரப்பில் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்ட சமயத்தில் 1, 2 பிரதிவாதிகள் இறந்துவிட்டதால் மேற்படியார்களின் வாரிசுகளை கட்சி சேர்க்க வேண்டி இ.ம.எண்.10/2025 மனுவானது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது நிலுவையில் இருந்த சமயத்தில் மாண்பமை திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிபதி ஐயா அவர்களின் A.No.388/2025, D.No.281/2026, நாள் 09.01.2026 உத்தரவின் அடிப்படையில் மேற்படி வழக்கானது தாராபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.4/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி இ.ம.எண்.10/2025 மனுவானது இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.1/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அசல் வழக்குரையில் இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி திருத்தம் செய்துகொள்ள அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது இம்மனுவின் மனுதாரர்/வாதியால் 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் 3 முதல் 8 எதிர்மனுதாரர்களை 3 முதல் 6 பிரதிவாதிகளை வழக்குரையில் கட்சி சேர்த்து வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியம் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது. மேலும் இம்மனுவில் கோரியுள்ள திருத்தல் விபரங்கள் அசல் வழக்கின் அடிப்படைத் தன்மையை மாற்றும் வகையிலோ புதிய வழக்கை தோற்றுவிக்கும் வகையிலோ இல்லை. மேற்படி திருத்தத்தை செய்யும் பட்சத்தில் தான் அசல் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

7. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையில் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மற்றும் புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும் வகையில் இல்லை என்பதாலும் இம்மனுவில் கண்டுள்ள மேற்படி திருத்தங்கள் அசல் வழக்கில் செய்யப்படும் பட்சத்தில் தான் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 22ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.22 19:19:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.22 19:19:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.